தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

புதன்கிழமை, 1973 நவம்பர் 21.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

Kallar Reclamation Schools

*14 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether teachers serving in the Kallar Reclamation Schools are denied the Selection Grade scales of salary granted to teachers serving in other schools; and

(*b*) if so, the reason therefor?

கள்ளர் சீர்திருத்தப் பள்ளிகள்

திரு. சி. வி. ராஜகோபால் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கள்ளர் சீர்திருத்தப் பள்ளி ஆசிரியர்களுக்கு பிற பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது போன்று தேர்வுத் தர வீதங்களில் (Selection Grade) சம்பளம் வழங்கப்படுவதில்லையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) இல்லை. கள்ளர் சீரமைப்பின் கீழ் இயங்கி வரும் பள்ளிகளுக்கு தேர்வு நிலை ஆசிரியர் பதவிகள் உண்டு பண்ண அரசு ஆணை (பலவகை) 621, நாள் 16—7—1973-ல், ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

(இ) எனவே கேள்விக்கு இடமில்லை.